2012 ஜனவரி 31]

அடுத்து, வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

பாசன வசதி

***2726—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பகுதியிலுள்ள படேதலா கால்வாய்க்கு மார்க்கண்டேயன் ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் மாரச்சந்திரம் கிராமத்தில் மார்க்கண்டேய நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மாரச்சந்திரம் அணைக்கட்டிலிருந்து ஆற்று நீர் செல்லும் பொருட்டு 17.90 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டு, தண்ணீர் ஏரிக்கு வருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பகுதியில் அமைந்துள்ளது படேதலா கால்வாய் பகுதியாகும். அது நூற்றுக்கு மேற்பட்ட காய்ந்துபோன ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்குகின்ற திட்டமாகும். கடந்த 2005 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வேப்பனஹள்ளி தொகுதியில் அமைந்துள்ள மார்க்கண்டேயன் ஆற்று நீரைத் திருப்பி, கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள பெரிய ஏரிக்குக் கொண்டு வந்து, அங்கிருந்து

படேதலா கால்வாய்மூலம் காய்ந்துபோன ஏரிகளுக்கு வழங்குகிற திட்டமாகும். 2005 இல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், 2006 இல் தலைவர் கலைஞர் ஆட்சியில், மேற்படி திட்டத்திற்காக மீண்டும் கூடுதலாக 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, சுமார் 95 சதவிகித பணிகள் அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், கேள்விக்கு வாருங்கள். இவ்வளவு பேப்பர்களை வைத்துக்கொண்டு நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவது போல் பேசக் கூடாது. கேள்விக்கு வாருங்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படேதலா கால்வாயில் எப்போது தண்ணீர் விடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் கேள்வி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதிய அளவு தண்ணீர் இருக்கும்பொழுது, தண்ணீர் திறந்துவிடப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படேதலா கால்வாய் தண்ணீர்மூலம் பர்கூர் பகுதியிலுள்ள, வெண்ணம்பள்ளி, சுண்டம்பட்டி, மருவேபள்ளி, ஆஞ்சூர், நக்கல்பட்டி, மோடிகுப்பம், அச்சமங்கலம், ஜகதேவி, சக்கிலிநத்தம், ஆம்பள்ளி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிகளிலுள்ள ஏரிகளுக்கு நீர் கிடைக்கும். மார்க்கண்டேயன் நதியில் தண்ணீர் இல்லாமல், கடந்த பத்து ஆண்டுகளாக வறண்டு போயுள்ளதால், இத்திட்டம் பயனற்றுப் போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, கிருஷ்ணகிரி தொகுதி எண்ணெகொல் அருகில் ஓடும் தென்பண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, குருமர்பள்ளி, புளியஞ்சேரி, பீமாண்டபள்ளி, குத்தப்பள்ளி, குப்பச்சிபாறை வழியாக கால்வாய் வெட்டி, மாரசந்திரம்

2012 ஜனவரி 31]

அருகே உள்ள மார்க்கண்டேயன் நதி தடுப்பணைக்கு தண்ணீர் விடுவதன்மூலமாக படேதலா கால்வாய் திட்டம் பயன்பெறும். கடந்த 2009 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதற்கான ஆய்வுப் பணிகள் எல்லாம் நடைபெற்றுள்ளன. ஆகவே, மேற்படி திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொல்வதுபோல் கடகடவென்று வாசித்தார்கள். அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Please sit down. அந்த வார்த்தை என்ன unparliamentary word–ஆ? நீங்கள் சொல்லுங்கள். Unparliamentary word என்றால் நான் எடுத்துவிடுகிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பவர் ஒரு இழிவான செயலைச் செய்பவர் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது unparliamentary word அல்ல. அதை ஏன் unparliamentary word என்று சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) Please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** போல கடகடவென்று பேசினார் என்றுதான் சொன்னாரே தவிர, கொச்சைப்படுத்துகின்ற வார்த்தை அதில் ஒன்றும் வரவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அதுகுறித்து ஐயப்பாடு தெரிவித்திருக்கின்றார். அவருடைய மனம் புண்படும்படியாக இருந்தால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கத்தை அளித்துள்ளார்கள். அவருடைய விளக்கத்தை ஏற்று அந்த ** என்ற சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

அடுத்து வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

சுற்றுலாத் தலம்

*__463__—**திரு. ப. மோகன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்கு ஏற்கெனவே ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, இந்த நிதி ஒதுக்கீட்டின்மூலம் ரூ.38.45 இலட்சம் மதிப்பீட்டில் கரியாலூர் ஏரி மேம்பாட்டுப் பணிகள், ரூ.5.55 இலட்சம் மதிப்பீட்டில் பெரியாறு அருவிப் பகுதி மேம்பாட்டுப் பணிகள், ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் தாழ்வெள்ளி மலையில் சுற்றுச்சூழல் மற்றும் கருத்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.